கீழஅரசடி ஊராட்சி மன்றத் தலைவர் / செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

ந.க.எ.மு.அ.எண்: **01/2024** நாள் : 26.03.2024

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம், ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், கீழஅரசடி குக்கிராமம் சர்வே எண் : 227/B (4.50) ஏக்கர் 18218.00 சதுர மீட்டர் பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான அனுமதி அங்கீகாரம் வழங்கி உத்தரவிடல்.

பார்வை : 1. மனுதாரர் திரு.குமார் என்பவரது விண்ணப்ப நாள் : 04.03.2024.

2. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் (பொ) தூத்துக்குடி 6PIAZ285/THOOTHUKUDI/TCP/2024/2024/TCP.

3. Centage Charges Rs.29,700 dated : 13.03.2024.

4. Development Charges Rs.36,436 dated : 13.03.2024.

5. பல்வகை இரசீது Rs.4,500/- dated : 22.03.2024

6. ஊராட்சி தீர்மான எண் : 43 dated : 15.03.2024

உத்தரவு:

ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், கீழஅரசடி ஊராட்சி, கீழஅரசடி கிராமம் சர்வே எண் **: 227/2B (4.50)** ஏக்கர் **18218.00** ச.மீ பரப்பில் குடியிருந்து மனை பிரிவு தொழில் நுட்ப ஒப்புதல் பார்வை **2**-ல் கண்ட கடிதத்தின்படி நிபந்தனையுடன் வரப்பெற்றுள்ளது. ஏற்கனவே கீழூர் சார்பதிவாளர் ஆவண எண் : **1183/2024** நாள் : **04.03.2024** மற்றும் **1182/2024** நாள் : **04.03.2024** களின்படி சர்வே எண் : **227/2B** பொது உபயோகத்திற்கான ஆவணம் இவ்வலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பார்வை **2**-ல் கண்ட கடிதத்தில் அளிக்கபட்ட தொழில் நுட்ப அனுமதி ஒப்புதலின்படியும் அதனுடன் நிபந்தனைகளின் அடிப்படையிலும் உரிய கட்டணங்களும் செலுத்தப்பட்டு விட்டதாலும் நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் படி ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், கீழஅரசடி கிராம சர்வே எண் : **227/2B (4.50)** ஏக்கர்

: 227/2B (4.50) ஏக்கர் 18218.00 ச.மீ கீழ்கண்டவாறு குடியிருப்பு மனை பிரிவு அங்கீகாரம் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

சர்வே எண்	மனைப்பிரிவு எண்கள்	வீட்டு மனைகளின் எண்ணிக்கை	மொத்த பரப்பளவு
227/2B	01 முதல் 96 எண்ணம்	96	18218.00 ச.மீ

நிபந்தனைகள்:

1. பொதுப்பயன்பட்டிற்க்கு ஒதுக்கப்பட்ட இடத்தை மனுதாரர் பத்திரப்பதிவு செய்து கொடுத்ததை மனுதாரர் தனது சொந்த பொறுப்பில் ஊராட்சியின் பெயரில் பட்டா மாறுதல் செய்து கொடுக்க வேண்டும்.
2. மனுதாரர் ஊராட்சி உபயோகத்திற்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் கட்டுமானம் எதுவும் மேற்கொள்ளக் கூடாது.
3. தனி மனைகள் குறித்து நில உரிமம் மற்றும் அளவுகள் விபரம் ஆகியவற்றில் ஏதேனும் குறைபாடுகளோ முறைகேடுகளோ தெரியவந்தால் மேற்படி உத்தரவு எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
4. இடத்துடன் இணைக்கப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் மனைபிரிவு நிபந்தனைகள் முழுமையாக கடைபிடிக்க வேண்டும் தவறும் பட்சத்தில் மனை பிரிவு அங்கிகாரம் எந்தவித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யவேண்டும்.
5. ஊராட்சி தீர்மானம் எண் : 43 நாள் :15.03.2024

ஊராட்சி தலைவர் /செயல் அலுவலர்
கீழ் அரசடி ஊராட்சி
ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம்
தூத்துக்குடி மாவட்டம்